# பெண் கவிஞர்கள் பார்வையில் குழந்தைகளின் வாழ்வியல்

**திருமதி து. உஷா[1] , முனைவர் ஜெ. ஜெசிந்தா கிரேஸ்[2]**

[1]முனைவர்ப்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),

[2]*ஆய்வு நெறியாளர், தமிழ் துறை தலைவர் சுயநிதிப் பிரிவு*

[1,2] நிர்மலா மகளிர் கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் 641045

## முன்னுரை

மனிதன் தன் வாழ்வினை நெறிப்படுத்தவும் சீர்படுத்தவும் மனதை செம்மையான வழியில் செலுத்தவும் பெரிதும் துணை நிற்பது இலக்கியங்கள் ஆகும். காலத்திற்கு ஏற்ப இலக்கியங்களிலும் பல மாற்றங்களை காண முடிகிறது அவ்வகையில் இந்த காலச் சூழ்நிலைக்கு ஏற்ப படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர் சமுதாயத்தில் காணக்கூடிய மகிழ்ச்சியான நிகழ்வுகளை மட்டுமல்ல அவலங்களையும் படம் பிடித்து காட்டுவது என்பது இன்றையப் படைப்பாளர்களின் தனிச்சிறப்பு ஆகும். 21-ம் நூற்றாண்டுப் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகள் மூலம் சமுதாயத்தில் நிகழும் அவலங்களை எவ்வாறெல்லாம் வெளிக்காட்டி உள்ளார்கள் என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வுச் சுருக்கம்

சமுதாயத்தில் நிகழும் பல்வேறு விதமான அவலங்களை, கவிஞர்கள் தங்கள் கவிதைகள் காட்டுவது என்பது சமுதாயத்தின் மீது கவிஞர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது. இந்த சமூகத்தின் முக்கிய அங்கமாக விளங்கக்கூடியது குடும்பம் ஆகும். குடும்பம் என்பது பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கியது ஆகும். குழந்தைகள் பிறப்பதன் மூலமாக தான் சந்ததிகள் உருவாகின்றது அப்படி சிறப்பு பெற்ற குழந்தைகளின் வாழ்க்கை நிலை சிறப்பானதாக உள்ளதா என்று ஆராய்ந்தால் சற்று சிந்திக்க வேண்டிய நிலைதான் உள்ளது. இந்த சமூகத்தில் குழந்தைகள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் உள்ளது குழந்தைகள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளை பெண் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தங்களுடைய கவிதைகள் மூலம் வெளிக்காட்டி உள்ளார்கள் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## ABSTRACT

Study Summary The fact that the poets show various kinds of misfortunes happening in the society in their poems shows the concern of the poets towards the society. The most important part of this society is the family. Family includes parents and children. It is only through the birth of children that generations are formed. If we examine whether the life conditions of special children are better, it is a situation to think about. The problems that children may face in this society are increasing day by day. This article examines the problems that children may face.

## திறவுச் சொற்கள்

**குழந்தைகள், வறுமை, பொருளாதாரம், பாலியல் அத்துமீறல்கள்,கல்வி, சமூக வாழ்வியல், சமூகச் சிந்தனைகள்.**

## சிறு குழந்தைகளின் வாழ்வியல் நிலைகள்

சிறுவர் சிறுமியர்களின் வாழ்வியல் நிலையை குறித்து ஆராய வேண்டிய நிலைக்கு இச்சமூகம் தள்ளப்பட்டுள்ளது. சமூகத்தில் ஒருபுறம் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கல்வி அத்தியாவசியத் தேவைகள் என எல்லாம் சரியாக கிடைப்பது, மறுபுறம் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவும் கல்வி எட்டாக்கனியாகவும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பொருளாதாரத்தில் பின் தங்கிய குழந்தைகள் என இந்த சமூகத்தில் இரண்டு விதமான குழந்தைகளின் வாழ்வியல் நிலைகள் காணப்படுகிறது.

**குழந்தைகளுக்கு பாதுகாப்பு**

பெண் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பும் அரவணைப்பும் இன்றைய காலகட்டத்தில் கிடைக்கிறதா என சிந்தித்தால் இல்லை என்பது தான் உண்மை. ஏனென்றால், அன்றாடம் ஊடகங்கள் வாயிலாக வரும் செய்திகளே இதற்கு ஆதாரம். வீடு, பள்ளிக்கூடம் பொது இடங்கள் என எல்லா இடங்களிலும் பெண் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை கவிஞர் அ. வெண்ணிலாவின் ”வயதுக்கு வராத தேவதைகள்” என்னும் கவிதையில்

**“பல்லக்கில் வரும் அம்மனைப் பார்த்து**
**பூரண அலங்காரம் என கன்னத்தில்**
**போட்டுக் கொள்வாள் அம்மா பல்லக்கு**
**இருட்டில் இடுப்பில் கிள்ளு வாங்குவாள்**
**சாமி பார்க்க நிற்கும் பத்து வயது மகள்”** [1]

(ப.124 எரியத் துவங்கும் கடல் அ. வெண்ணிலா)

பொது இடங்களில் சிறு குழந்தைகள் சந்திக்கும் பாலியல் சீண்டல்கள் பற்றி கவிஞர் குறிப்பிடுகிறார். இக்கவிதையில் தாயும் மகளும் கோயிலுக்குச் சென்று அம்மனை தரசிக்கிறார்கள். அவர்களின் அம்மா அம்மனைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போது பெதும்பை வயது பெண்ணுக்கு பாலியல் சீண்டல் ஏற்படுவதை கவிஞர் தனது கவிதைகளில் வெளிபடுத்தியுள்ளார். பொது இடங்களில் மட்டும் தான் என முடிவுக்கு வந்து விட முடியாது என்பதை”ஒரு வகுப்பறையும் சில இளவரசிகளும்” என்னும் கவிதையில் அ வெண்ணிலா

**”அங்க பார்த்தேன் இங்கு பார்த்தேன்**
**இப்படி தொட்டேன்னு யார்கிட்டயாவது**
**சொன்ன பள்ளிக்கூடம் வர முடியாது**
**காலையில சீக்கிரம் வரணும் சாய்ந்திரம்**
**என் சைக்கிள்ல வரணும் படிக்கிறேன்னு**
**என்று திமிரா உங்கம்மா கிட்ட சொன்ன**
**வீட்டை விட்டு வெளியே வர முடியாது சொல்ற படி நடந்துக்க”** [2]

(ப 122 எரியத் துவங்கும் கடல் அ.வெண்ணிலா)

ஏன்ற கவிதையின் வாயிலாக பள்ளிக்கூடம் செல்லும் பெண் குழந்தைகளுக்கு ஏதோ ஒரு சூழலில் பாலியல் அத்துமீறல்களும் பாலியல் சீண்டல்களும் ஏற்பட்டுக் கொண்டுதான் உள்ளது. பிள்ளைகளைப் பாதுகாக்கும் ஆசிரியர்களே பெண்பிள்ளைகளை தனது இச்சைக்கு உட்படுத்துவத்தை கவிதை வரிகளுக்காக மட்டும் ஆசிரியர் எழுதவில்லை, இச்சமுதாயத்தில்

நடக்கும் அவலங்களைத்தான் கவிதையாக வெளிபடுத்தியுள்ளார் என்று கூறுவதன் வாயிலாக அறிய முடிகிறது.

**“எல்லா காலத்திலும்**
**கைதாகிக் கொண்டிருக்கிறார்கள்**
**ஆறு வயது குழந்தை பலாத்கார வழக்கில்”** [3]

(ப.123 எரிய துவங்கும் கடல் அ.வெண்ணிலா)

பாலியல் பலாத்காரத்தோடு மட்டும் விட்டு விடுவதில்லை காமக்கொடூரர்களால் சில சமயங்களில் அந்த பிஞ்சு குழந்தைகள் கொல்லப்படுவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்தற்கு,

**”பாரதிதாசன் பெண்களை**
**குடும்ப விளக்கு என்று சொன்னாலும்**
**சொன்னார் நம்மவர்கள் எண்ணெய்**
**ஊற்றி எரித்தே விடுகிறார்கள்”** [4]

(ப.52 நீ எழுத மறுக்கும் எனதழகு இளம்பிறை)

பச்சிளம் குழந்தைகளை துன்புறுத்துவதும் மட்டுமல்லாமல் தங்களின் இச்சைகள் தீர்ந்து குழந்தைகள் கொல்லப்படுவதும் இந்த சமூகத்தில் இயல்பான விஷயமாக மாறிவிட்டது. பொது இடம் பள்ளிக்கூடம் என பாதுகாப்பற்ற சூழல் வாழும் பெண் குழந்தைகளுக்கு வீட்டில் பாதுகாப்பு இல்லை ”குளித்துவிட்டு அப்படியே ஓடி வரக்கூடாது மகளே துண்டு கட்டியிருக்கேம்மா இடுப்பிலிருந்து துண்டை நெஞ்சுவரை ஏற்று மேல் சட்டை அணிந்து தூங்கு கசகசன்னு இருக்குமா புழுங்கி கசங்கினாலும் காற்றாட முடியாது மகளே நம்ம வீடு தானேம்மா செங்கல் சுவருக்கும் கண் உண்டு மகளே குழந்தையில்லையாம்மா நான் குழந்தைதான் தங்கமே பெண் குழந்தை(ப.117 அ.வெண்ணிலா எரியத் துவங்கும் கடல் கவிஞர் தாய்மீன் உணர்வோடு பெண் குழந்தையின் நிலையை சமூகத்துக்கு எடுத்துக்காட்டு இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

**பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகள்**

அனைவருக்கும் கல்வி என்ற சட்டம் அமல்படுத்தப்பட்டால் மட்டும்தான் நாடு சிறப்பு பெறும் தரணி செழிப்பாகும் ஆனால் எழுத்தளவில் மட்டுமே இந்தச் சட்டங்கள் இருப்பதால்தான் இன்றும் சிறுவர்கள் தொழிற்சாலையில் படிப்பறியும் அவலம் தொடர்ந்து நடைபெற்று கொண்டு இருக்கிறது. கல்வி கற்காமல் சிறு குழந்தைகளுடைய வாழ்க்கை அடைபட்டு போவதை கண்டு கவிஞர் தாய் போல பரிதவித்து கலங்குகிறார். சிவகாசி தொழிற்சாலைகளில் கல்வி பெறவேண்டிய வயதில் இருக்கும் குழந்தைகள் குடும்பத்தின் மோசமான பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக வேலை செய்வதைக் கண்டு வேதனைப்படுகிறார். அங்கு வேலை செய்யும் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதை பார்த்து கவிஞர் குழந்தைகளின் வாழ்வு தீப்பெட்டிக்குள் அடங்கி விடுவதாக ஆதங்கப்படுகிறார் .கைக்குள் அடங்கும் தீப்பெட்டி போல குழந்தைகளின் மேன்மையான வாழ்வு ஒரு கட்டத்திற்குள் அடங்கியும் பாழாகியும் விடுகிறது.

**”தீப்பெட்டிக்குள் அடைப்பட்ட அறிவுச்சுணை சிவகாசிக் குழந்தை”**
**”தீப்பெட்டிக்குள் ஒளியுடன் அடக்கம்**
**உழைக்கும் சிறுமிகளின் வாழ்விலோ**

**ஏற்படும் இருளின் தொடக்கம்”** [5]

(மரிய தெரசா நெருப்பு விரல்கள் பக்கம் 36-2) அதேபோல மற்றொரு கவிஞரான இரா. சந்திரன்

**”தீப்பெட்டி ஆலை வதங்கும் குழந்தைகள் வறுமை”** [6]

(இரா. சந்திரன் சுட்டிப் பூங்கா ப.61-2)

இவ்வாறு பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் குழந்தைகள் குடும்பத்திற்காக கல்வியை கைவிட்டு வேலைக்குச் செல்லும் நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறன குழந்தைகள் சமுதாயத்தில் இன்னும் இருக்கிறார்கள்.என்பதை கவிஞர் எடுத்துரைக்கிறார்.

**குழந்தைகளை காப்பகத்தில் விடுவது:**

நம் முன்னோர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் ஒரே வீட்டில் பத்து குழந்தைகள் இருந்தாலும் கூட கூலி வேலை செய்தாவது அந்த குழந்தைகளை தாய் தந்தை அரவணைப்பிலேயே வளர்க்கப்பட்டார்கள். ஆனால் இன்றைய நவீன காலகட்டத்தில் குழந்தைகளை காப்பகத்தில் விடுவது இயல்பாக நடந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளை காப்பகத்தில் விடுவதற்கான காரணங்களை சற்று ஆராய்ந்து பார்த்தால் தாய் தந்தை உறவுகளில் ஏற்படும் பிரிவு அல்லது இறப்பு , தகாத உறவுகளினால் பிறக்கும் குழந்தைகள் அல்லது குடும்பத்தில் காணப்படும் வறுமை என பல காரணங்களை குறிப்பிடலாம். கவிஞர் இளம்பிறை “பிரிவு“ என்னும் கவிதையில் தன் குழந்தையை பராமரிக்க முடியாத சூழலில் இருக்கும் தாய் அந்த குழந்தையை காப்பகத்துக்கு அனுப்பும் போது,

**”உன்னை விடுதியில் சேர்த்து**
**விட்ட இயலாமையின்**
**விம்மல்களுடன் மகனே”** [7]

(ப.70 அவதூறுகளின் காலம்)

இக்கவிதைகள் தாய் பறவை மரக்கிளையில் கூடு கட்டி இருக்கும். அந்தப் பறவை முள், குச்சிகளை சுமந்து வந்து கூடு கட்டி முட்டை விழாமல் இருப்பதற்கு நாறால் மெத்தை போல பிண்ணியும் அந்த கூட்டை வேறு எவரையும் அண்ட விடாமல் பாதுகாக்கும் வீரம், பொறிக்க இருக்கும் குஞ்சுகளுக்காக அந்த தாய் பறவையை பார்த்து இந்தத் தாய் கலங்குகிறாள். குழந்தையை வளர்ப்பதற்கு இயலாமல் போனதைப் பற்றி. தாயின் உள்ளக் குமுறலை வேதனையோடு கவிஞர் வெளிப்படுத்தி இருப்பது காப்பகத்தில் விடும் ஒவ்வொரு தாயின் உள்ளத்தையும் வெளிகாட்டுகிறது.

**வறுமையின் பிடியில் குழந்தைகள்**

வறுமையினால் ஏற்படும் தாக்கம் சிறு குழந்தைகளை மட்டும் விட்டு விடுமா என்ன? வறுமையினால் சிறு குழந்தைகள் படும் துயரங்களையும், இழப்புகளையும் சொல்லி முடியாது என்பதை விளக்கும் விதமாக கவிஞர் நிர்மலா சுரேஷ் கிராமம் என்ற கவிதையில

**”எண்ணெய் செக்கில்**
**எடுபிடி வேலை செய்கிறான்**

**பரட்டைத்தலைச் சிறுவன்”** [8]

(அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி பக்கம் 61)

கல்வி பயில வேண்டிய பருவத்தில் பள்ளிக்கூடத்தின் சுகத்தையும், மகிழ்ச்சியையும், தொலைத்து தொழிற்சாலைகளில் அடைக்கப்படுகின்றனர். குழந்தைகள் எடுபிடி வேலை செய்து குடும்பத்தை தாங்கும் தூண்களாக இருக்கிறார்கள்.அப்படிபட்ட சிறுவர்களின் தலைக்கு எண்ணெய்க் கூட கிடைப்பதில்லை என்று நிர்மலா சுரேஷ் தன் கவிதையின் மூலம் ஆழமான வருத்தத்தை தெரிவிக்கிறார். மேலும் மற்றொரு கவிதையில் கம்பளம் வாங்கலையோ கம்பளம் என்ற தலைப்பில் தன்னுடைய வேதனையை இன்னும் அழுத்தமாக பதிவு செய்கிறார்

**”ரத்தச் சோகை உடம்புகள்**
**தந்த சிவப்பு கம்பளம்**
**பிள்ளை இலக்கியத்தை கொள்ளை**
**அடித்த மேட்டுக்குடி காவியம்”** [9]

என்ற இக்கவிதையில் அழகாக வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு கம்பளத்திற்கு பின்பாக ஒரு பிஞ்சு குழந்தையின் உழைப்பு இருக்கிறது. சரியான உணவ கிடைக்காமல் இரத்த சோகையான உடம்போடு வேலை செய்வதை எண்ணியக் கவிஞர் அந்த கம்பளத்தின் அழகை ரசிப்பதற்குள் அதை பிண்ணிய பிஞ்சு குழந்தைகளை எண்ணி வருந்துகிறார்.

**முடிவுரை**

இவ்வாறு சிறு குழந்தைகள் சமுதாயத்தில் படும் துயரங்களையும், அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளையும், அவலங்களையும், பெண் கவிஞர்கள் தங்களுக்கே உரித்தான பாணியில் மட்டுமல்ல, தாய்மை உணர்வோடு வெளிப்படுத்தி இருப்பது சமுதாயத்தின் மீது கவிஞர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது. அதோடு மட்டுமல்லாமல் சிறு பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சூழ்நிலைகளை தங்கள் கவிதைகளின் வாயிலாக படம் பிடித்து காட்டி, நம் கண்முன்னே கொண்டு வந்துள்ளனர். இக்கவிதைகளின் மூலம் ஒவ்வொரு பெண் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு மட்டுமல்ல சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் பொறுப்பு உண்டு என்பதை உணர வேண்டும் என்பது இக்கட்டுரையின் வாயிலாக புலப்படுகிறது.

**துணை நூற்பட்டியல்**


**1)பக்.124 எரியத் துவங்கும் கடல் அ. வெண்ணிலா**

**2) பக்கம் 122 எரியத் துவங்கும் கடல் அ. வெண்ணிலா**

**3) பக்கம் 52 நீ எழுத மறுக்கும் எனதழகு இளம்பிறை**

**4) பக்கம் 117 எரியத் துவங்கும் கடல் ஆ வெண்ணிலா**

**5) பக்கம் 61-2 சுட்டிப் பூங்கா இரா.சந்திரன்**

**6) பக்கம் 36-2 நெருப்பு விரல்கள் கவிஞர் மரிய தெரசா**

**7) பக்கம் 70 அவதூறுகளின் காலம் இளம்பிறை**

**8) பக்கம் 61 அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி கவிஞர் நிர்மலா சுரேஷ்**

**9) பக்கம் 34 கடிகார குயிலும் கடல் குதிரையும் கவிஞர்** நிர்மலா சுரேஷ்